# தென்றல்

விலை 16 புதிய காசுகள்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 5 | சென்னை | 30-8-58 | சனிக்கிழமை | இதழ் 11


## தூத்துக்குடித் தோழமை

கழகத்தின் கொள்கைகளை கம்யூனிஸ்டுகள் கலைத்துவிட்டதாகக் கனவு காண்கிறார்கள்! இந்த அகில உலகங்கள் - கழகத்தின் பிரிவினைக் கிளர்ச்சியிலே பிடிபட்டிருக்கிறார்கள். மீள வழி தெரியாததால் வேறுபல சேதிகளைச் சொல்லித் திரிகிறார்கள். தூற்றியும் வருகிறார்கள்!

கம்யூனிஸ்ட்க் கட்சிக்குத் தங்களது உடலையும் உழைப்பையும் வாடகைக்குத் தந்திருந்த காங்கிரஸ் சீர்திருத்த வாதிகளும் தமிழரசுக் கழகத்தவரும் - கழகத்தின் புகழுக்குரிய நிலையினை வெறும் வார்த்தை வீச்சுக்களினால் கீழே இழுத்துவிட முடியும் என்று நம்பியிருக்கிறார்கள்! இந்த மூன்று கட்சியினரும் எந்த ஒரு இலட்சியத்திலும் ஒன்று பட்டவர்கள் அல்ல - கழகத்தைத் தோற்கடிக்க வேண்டும் என்ற ஒரே ஒரு கெட்ட நினைப்பும் - கொடுமையான ஆசையும்தான் காரணம்! இவர்கள் மூவரும் ஒருவருக்கொருவர் எப்படி இருந்தார்கள் என்பதை எண்ணிப்பார்த்தால்-இன்றையத்தினம் இவர்கள் போட்டுக்கொண்டுள்ள பத்தினி வேடங்கள்-திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியத்தையும் - வளர்ச்சியையும் மக்கள் மன்றத்திலே இருந்து மறைத்துவிடக் கொண்டுள்ள முயற்சி புதியதோர் அரசியல் விபச்சாரமாகும்! கம்யூனிஸ்டுகளைக் கட்டித் தழுவிக் கொண்ட, காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டியினரின் பத்திரிகை 'பேரிகை' தன்னுடைய முழு ஆதரவையும் நிபந்தனையின்றி அளித்துவிட்டு-அதே வேளையில் கழகத்தையும் கடுமொழிகளால் கண்டித்தது! கம்யூனிஸ்டுக் கன்னிக் கணவனுடன் சுற்றிவிட்ட 'பேரிகை' யெனும் காரிகைதான்-பருவமங்கை ஆயிரம் ஓட்டுக் குறைவாகப் பெற்ருள் என்று ஏசுகிருள்! "கம்யூனிஸ்டுகளைப் பொருத்தவரையில் ஒரு வார்த்தை சொன்னால் அதை எப்பாடு பட்டாலும் காப்பாற்றுகிறார்கள். அதிலும் தேர்தல் விசயங்களில் நல்ல முறையில் நடந்து கொள்கிறார்கள். ஜனநாயகக் காங்கிரஸ் இவர்களை ஆதரிப்பதற்கு இந்த நாணயப் போக்குத்தான் பெரிதும் காரணமாக இருக்கிறது" பேரிகை ஆசிரியர் மாரிசாமியின் இந்தப் பொன்மொழிகளைக் கண்டபோது வேறுபல செய்திகள் என் நினைவிற்கு வருகின்றன - கம்யூனிஸ்டுகளை ஆதரிக்கத்தான் வேண்டுமென்று சொல்லி - அவர்களைத்தவிர வேறு எவரும் தூத்துக்குடித் துணைத்தேர்தலில் வாகை சூட முடியாது, கழகத்தை மண் கவ்வச் செய்யவேண்டும் என்றெல்லாம்-அறைகூவல் விடுத்து அலுத்துப்போனவர்களும் - எந்தக் கம்யூனிஸ்டுகளுக்காக-இப்படிப் பல்லவி பாடினார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

"தோழர்கள் விழிக்கிறார்கள்! டில்லியிலுள்ள ஸ்தானிகர் வாபசாகிற ரகசியம்! மாஸ்கோவின் திடீர்க் கோபம்-கோபாலர் வட்டாரங்களில் சோகத்திரை! பூமிதான யக்ஞம் சிவப்புகள் வயிற்றில் புளி கரைத்திருக்கிறது. மாஸ்கோ தானம் நின்று விடுமோவெனக் கலங்குகிறார்கள்! இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்ட்க் கட்சிக் கோட்டையில் மற்றொரு பெரும் கீறல் ஏற்பட்டிருக்கிறது. புது டில்லியிலுள்ள ரஷ்ய ஸ்தானிகர் இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு உதவியாகவோ ஒத்தாசையாகவோ இல்லை! இவர் காலத்தில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி ரொம்ப சீரழிந்து விட்டது! ரஷ்யாவிலிருந்து வருகிற ஸ்தானிகர்கள் இந்தியாவில் பல வேலைகள் செய்ய வேண்டும். அதில் ஒன்று இங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகளை அவ்வப்போது அறிவித்து வருவது. அவசியமானால் தங்கள் கருத்தையும் கூறி ஆலோசனை கேட்பது. இப்போது இந்தியாவை விட்டுச் செல்கிற தூதர் இந்த வேலையில் தோற்றுவிட்டார். இவர் அனுப்பின அறிக்கைகளில் கம்யூனிஸ்ட் நடவடிக்கைகள் பற்றி சரிவரக் கூறவில்லையாம். தோழர்களான கோபாலர்களும், நம்பியார்களும், ரணதிவேக்களும், கோசுக்களும் சொல்லியபடி 'எல்லாம் நன்றாகவே இருக்கிறது' எனக் கூறியிருக்கிறார். ஆனால் உண்மையில் என்ன நிலவரம் நிலவுகிறது? **கம்யூனிஸ்டுக் கட்சி ஸ்டாலின் மறைவுக்கு முன்பிருந்தே கரைய ஆரம்பித்துவிட்டது. இப்போதோ கழுதை வெகு துரிதமாகத் தேய்ந்து கட்டெறும்பிலும் சித்தெறும்பாகிவிட்டது. இதைக் கேட்க மாஸ்கோவில் ரொம்ப ஆத்திரமாம். ஆத்திரத்தில் பாதியை இந்த அப்பாவி ஸ்தானிகர் மீதும்** பாக்கியை இந்திய "சிவப்புத் தோழர்கள்" மீதும் திரும்பியிருக்கிறார்கள். இதன் விளைவே இன்றுள்ள ஸ்தானிகர் 'டிஸ்மிஸ்' ஆவது. 'பேரிகை'யின் புதுடில்லி நிருபர் 7-9-53ல் இந்த ருசிகரமான தகவலை ஆசிரியர் மாரிசாமி அவர்கள் வாயிலாக நமக்கெல்லாம் தெரிவித்திருக்கிறார்! இந்தியக் கம்யூனிஸ்டுகளைப்பற்றி இவ்வளவு மட்டரகமான மதிப்புரைகள் தந்துள்ள 'பேரிகை' இதழ் இன்றைக்குத் துதி பாடுகிறது - காரணம் கழகத்தின் மீதுள்ள காய்ப்பு! கம்யூனிஸ்டுகள் - கட்டுக்கோப்பான வீரர்கள் 'பேரிகை'யின் இந்தப் பட்டமளிப்புகளை மறந்துவிட்டு - தோள்மீது கைபோட்டுக்கொண்டே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூய பணியை எள்ளி நகையாடுவதும் - நாவால் திண்டத்தகாத மொழிகளைக் கூறுவது-நல்லறிவாளர் செயலா?

திராவிட முன்னேற்றக் கழகம் திருந்தவில்லையென்றால் 1956-ல் உள்ள பதினைந்தையும் இழந்துவிடும்" என்று 'பேரிகை' யார் பேசியதை 'ஜனசக்தி'யார் 4-8-58ல் மிகவும் பூரிப்பாக எடுத்துப் போட்டுக்கொண்டார். அதைவிடச் சுவையான சில வாக்கியங்களை தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்கு தருவது அவசியமாகிறது. **"இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கும் மாஸ்கோவிலிருந்து சவுக்கடி கிடைத்திருக்கிறது; லட்சம் லட்சமாக பணமனுப்பியும் ஒரு இழவு வேலையும் காணுமே? எல்லோரும் சட்ட சபைக்குள் புகுந்து குட்டி பூஸ்வாவாகிவிட்டீர்களா? என்று மாஸ்கோவிலிருந்து இந்தியத் தோழர்களுக்கு சவுக்கடி வந்திருக்கிறதாம். இந்த சவுக்கடி வந்த பிறகுதான் தோழர்கள் 'காஷ்மீர தினம்' கொண்டாட அறிக்கை விட்டது. இதன் உண்மையான நோக்கம் செத்துவரும் கம்யூனிஸ்டு கட்சிக்கு உயிர் கொடுக்கச் செய்கிற ஒரு முயற்சியாகும்"**

"தோழர்களுக்கு நிலப் பிரச்னைதான் கொட்டமடிக்க சிறந்ததொரு இடம். விவசாயிகளைத் தூண்டிவிட்டு தெலிங்கானுக்களை உண்டு பண்ணிவிட்டால் தோழர்கள் பாடு கொண்டாட்டமாகிவிடும். ஆனால் பூமிதான இயக்கம் தோழர்கள் வயிற்றில் புளியைக் கரைத்துவிட்டிருக்கிறது. தோழர்களுக்கு இது ஒரு பெரிய அடி. **இரண்டாவது அடி மாஸ்கோவிலிருந்து வருகிற கண்டனங்கள் இதை ஒட்டி பணம் வருவதும் தடைபடும். பிறகு தோழர்கள் என்ன செய்யப் போகிறார்களோ தெரியவில்லை"**

திராவிட முன்னேற்றக் கழகத்தவர் இப்படியெல்லாம் கம்யூனிஸ்டுகளைப்பற்றி எந்தக் காலத்திலும் கண்டித்துப் பேசியதில்லை. காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டியினர்-தங்களுக்கு ஏணியாகவும் ஏறி மிதிக்க ஏற்றதொரு கட்சியாகவும் கருதி வருகின்ற கம்யூனிஸ்டுகளைப்பற்றிப் பெரிதும் புகழ்ந்துகொள்கிறார்கள். ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்னால் கம்யூனிஸ்டுத் "தோழர்களை" எத்தகைய இழி மொழிகளுக்கு இலக்கியமாக்கியுள்ளார்கள் என்பதைத்தான் மேலே தந்துள்ள குறிப்புகள் கூறுகின்றன. இயயம் வெளியீடுயெனும் 'பேரிகை' 7-9-53ல் முதல் பக்கத்து செய்தியாக - கம்யூனிஸ்டுகளுக்குச் சவுக்கடிகளைத் தருகிறது. ஓட்டுக்களைத் தேடியலைந்த கம்யூனிஸ்டுகள்-மாரிசாமிகள் தந்துள்ள இந்தச் சவுக்கடிகளையும் தாங்கிக்கொண்டார்கள்! உடலில் ஓடுவது சரியான ரத்தமா அல்லது சாக்கடைத் தண்ணீரா என்பதை அவர்களுடைய உணர்ச்சியால் பரிசோதிக்க வேண்டும்!

இந்தியக் கம்யூனிஸ்டுகள் கொள்கைப் பிடிப்பைப் பற்றி உரக்கப் பேசுவதில் இன்பம் காண்பவர்கள். ஆனால் தூத்துக்குடி உபதேர்தலில்- 'பேரிகை' தட்டிய கட்சிக்காரர்களுடன் இணைந்து கழகத்தை எதிர்த்தார்கள் - திருவாடானையில் செய்ததுபோல! பேரிகை வட்டாரத்தவருக்குக் கொள்கையல்ல முக்கியம் - பதவி! ஏதாவதொரு பதவி! எப்படியாவது-எவருடனும் கூடிக் கலந்து அதைப் பெற்றிட வேண்டும்-தங்களால் செய்ய இயலாத வேலைக்கு-வெளி விளம்பரம் பெற்றுள்ள கம்யூனிஸ்டுகளைக் கடன் கேட்டுள்ளார்களே தவிர- கம்யூனிஸ்டுத் தத்துவங்களிலோ- அல்லது கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைச் சிறப்புகளிலோ- கொண்டுள்ள நம்பிக்கையின்லோ அல்ல! இதற்கோர் சான்றாக 'பேரிகை' பேசுகிறது. கேளுங்கள்!

# கூடா நட்பு தீதாய் முடியும்

## காலைப்பிடிக்கும் காம்ரேடுகள், கழுத்தை நெறிக்க அஞ்சுவரா?

குறிப்பாக கம்யூனிஸ்டுகள் கவனித்தில் கொள்ள வேண்டிய அறிவுரைகளாகும்! “சட்டசபையில் பட்ஜெட் விவாதத்தில் பேசிய **தோழர் ராமமூர்த்தி எதை - எதையோ கூறி குழப்பியிருக்கிறார். தமது பிரசங்கத்தில் மறந்துவிடாமல் தவறிவிடாமல் மாஸ்கோ விசுவாசத்தைக் காட்டியிருக்கிறார்.** அந்த நன்றி உணர்ச்சிக்கு அவரைப் பாராட்ட வேண்டியதுதான். சென்னை நிதி மந்திரி சமர்ப்பித்த பட்ஜெட்டைக் குறை சொல்ல புறப்பட்டு ஐந்து வருடத் திட்டத்துக்குப் போய், அங்கிருந்து நேருவிடம் போய் அப்படியே மாஸ்கோவுக்கு ஒரு தாவு தாவி விட்டார்... உருப்படியான யோசனை கூறினால் மிகவும் பாராட்டத்தக்கதாக இருக்கும். அதை விட்டு விட்டு எங்கள் எஜமானர் (ரஷ்யர்கள்) போட்ட திட்டம் மாதிரி உங்கள் திட்டம் இல்லை என்று பேசி காலத்தைக் கழிப்பது, ராமமூர்த்தியின் பொருத்தமற்ற வாதமாகும்” ‘பிரபல எதிர்க்கட்சித் தலைவராக’ இருந்தவரைப் பற்றிக் கம்யூனிஸ்டுகள் உள்ளங் குளிரும் வகையில் ‘பேரிகை’ யார் பேசியிருக்கிறார். சந்தேகப்படுபவர்கள் 4-1-1954 ‘பேரிகை’ இதழைப் பாருங்கள். ஜனநாயகப் போர்வையாளர்கள் கம்யூனிஸ்டுகளின் பின்னால் சுற்றுவது ஏன் என்பதையும் இனியாவது உணருங்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தவருக்கு எச்சரிக்கைகளும் - ஆய்வுரைகளும் தருகின்ற மாரிசாமி போன்ற ‘மதிவாணர்கள்’ தங்களால் இழித்தும் பழித்தும் பேசப்பட்ட கம்யூனிஸ்டுகளுடன்- அவர்கள் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களின்றும் விடுபட்டுக் கொள்ளாமல் இருக்கும்போதே - உதவி கொண்டு தன்மான உணர்வு இழப்பது ஏன் என்பதையும் கூற வேண்டும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியங்களைப் புரிந்து கொள்ளாத கம்யூனிஸ்டுகளுக்கு - விளக்கத்துக்கு விளக்கம் என்ற வகையில்-சலிப்பும் சோர்வுமின்றி பேசித் தீரவேண்டிய கடமை நமக்குண்டு - கம்யூனிஸ்டுகளின் மறுப்புரைகளைக் கேட்டுப் படித்து-பின்பும் - எதிர் மறுப்புரைகளைத் தருகிறோம். தாழ்வான முறையில் அன்றுமுதல் இன்றுவரை எந்தச் சான்றும் இல்லை-ஆனால் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின்-தமிழ்நாட்டுப் பேரறிவாளரைப் பற்றி அவர்களின் அந்தரங்க நண்பர் ‘பேரிகை’ யார்-மாஸ்கோவில் பெரியா சுட்டுக் கொல்லப்பட்டபோது சில கேள்விகளைக் கேட்டார். அதன் அழகைக் காணுங்கள். கம்யூனிஸ்டுகளே நீங்கள் காறி உமிழ வேண்டாம் கண்ணீர் சிந்துங்கள். **“பெரியா விஷயத்தில் கம்யூனிஸ்டுத் தோழர்கள் ஆத்திரப்படுவதில் அர்த்தமில்லை. பெரியாவை ஏற்கனவே சுட்டுவிட்டார்கள். மரண தண்டனை விதிக்கப்படு முன்பே கொல்லப்பட்டிருக்க வேண்டும். இது இங்குள்ள மாஸ்கோ தாசர்களுக்கு கோபத்தைஉண்டாக்குகிறது - “ஐயோ - அத்தனையும் பொய். எல்லாம் முதலாளித்வப் பிரச்சாரம்” என்று தொண்டை கிழியக் கத்துகிறார்கள்...**10-1-54 ஜனசக்தி இதழ் ஏழாம் பக்கத்தில் எல்லோரையும் வீண் வம்புக்கு இழுக்கிறார் தோழர் வி. பி. சிண்டன்—“பெரியா வழக்கு பற்றிய அவதூறுகளுக்குப் பதில்” என்று போட்டுக்கொண்டு **முட்டாள்தனமான வாதத்தைக் கிளப்பியிருக்கிறார். தோழர்கள் இவ்வளவு படுமுட்டாள்த்தனமாக வாதிப்பார்கள் என நமக்கு இவ்வளவு நாட்கள் தெரியாது”** - தோழர் எஸ். எஸ். மாரிசாமி அவர்களின் அன்புரைகள் 18-1-54 ‘பேரிகை’ இதழ் - இரண்டாம் பக்கத்தில் உள்ளன! தோழர் வி.பி. சிண்டன் அவர்கள் இன்றைக்கும் ‘ஜனசக்தி’ பக்கம் இருக்கிறார். தூத்துக்குடித் தேர்தலில் ‘பேரிகை’ப் பட்டாளம் போட்ட பெருங்கூச்சலில்—இந்தக் கடந்தகால கண்டனஉரையை அவர் மறந்துவிட்டாரா? தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் சகிப்புத்தன்மைக்கு உறைவிடமானவர்கள், எனவே இதனைப் பொறுத்துக்கொண்டோம். முருகானந்தம் வெற்றிக்கு வழி செய்தால் போதும் என்று முன்னைய நாட்களை மறந்தோம் என்று சிண்டன்கள் கூறுவார்களேயானால் மாரிசாமி அவர்களின் மகுடாபிசேக மணிமொழிகளை மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

**“தோழர் சிண்டனின் வாதத்தில் இருக்கும் முட்டாள்தனத்தைப் புரிந்துகொள்ள பிரமாதமான மேதா விலாசம் தேவையில்லை. சர்வ சாதாரணமானவர்கள்கூடப் புரிந்துகொள்ளலாம். (மத்திய மந்திரி) டாடா விவகாரத்தை பெரிய விவகாரத்தோடு ஒப்பிட்டுக் கூற எந்த முட்டாளுக்கும் யோசனை தோன்றாது. ஆர். கே. சண்முகம் செட்டியின் ராஜினாமாவையும், பெரியாவின் டிஸ்மிஸையும் ஒன்று சேர்த்துக் கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியில் இருப்பவர்கள்கூட கூறமாட்டார்கள். ஜான்மத்தாய் விசயத்தையும் பெரியாவுடன் ஒப்பிடுவது சுயபுத்தியுள்ளவர்கள் செயலல்ல. டாக்டர் அம்பேத்கார் ராஜினாமாவையும் சியாமபிரசாத் முகர்சி விசயத்தையும் நினைக்கும் சிண்டனின் வாதம் எவ்வளவு நேர்மையற்றது முட்டாள்தனமானது என்பதை நண்பர்கள் புரிந்துகொள்வார்கள்.** இவ்வளவு மட்டமான முறையில் வாதம் செய்வார்கள் தோழர்கள் என்று நாம் நினைக்கவேயில்லை. நாம் கூறுவதைக் கண்டு ஆத்திரப்படுவதில் பயனில்லை. நாம் கேட்டிருக்கும் கேள்விகளுக்குத் தைரியமிருந்தால் பதில் தரட்டும்” பேரிகையின் இந்த அறைகூவல் தோழர் சிண்டனுக்கு மட்டுமல்ல-இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒவ்வொருவரும் பதில் கூறக் கடமைப்பட்டவர்கள்! இவ்வளவு கீழ்த்தரமான வகையில் நெஞ்சத்தில் நஞ்சு மொழிகளை வைத்திருக்கும் ஒருவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி மிக மிகத் தாழ்வாக எழுதுகிறார். அதனைப் “பேரறிஞர்” பட்டியலில் சேர்ந்திருக்கும் ‘ஜனசக்தி’யார்கள் விளம்பரம் செய்கிறார்கள்! அவர்களைக் கேட்பேன். நீங்கள்மட்டும்- திருவாடானையில் ‘பேரிகை’யார் பக்கம் நிற்காமல் - தூத்துக்குடியில் அவர்களைத் துணைக்கு அழைக்காமல் ஒதுக்கியிருந்தால்- இம்ரேநாகி கொலை விசயத்தில், இன்று புகழ் பாடித் திரியும் மாரிசாமிகள் எவ்வளவு எழுதியிருப்பார்கள். ஏசியிருப்பார்கள்-ஏளனம் செய்திருப்பார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்கும் கூட்டணியில் ஒரு அங்கமாக இருந்த தமிழரசுக் கழகத் தலைவர் சிவஞானம் கம்யூனிஸ்டுகளைப் பற்றிப் பேசுவதை அன்புகூர்ந்து கேளுங்கள்! “மார்க்ஸும் லெனினும் தொழிலாளிகளைப் பற்றி ஏட்டில் படித்தவர்கள் இயக்கத்தில் கலந்து உணர்ந்தவர்கள் அல்ல. நான் பரம்பரைத் தொழிலாளி; என்னைத் தொழிலாளி வர்க்கத்திலிருந்து பிரித்துப் பார்த்து கம்யூனிஸ்டுகள் எனக்குப் பாடம் போதிக்க வேண்டாம். மார்ஸிஸம் - ஸ்டாலினிஸம் இவற்றோடு ஜோஷியலிஸமும் சேர்த்தே சொல்லவேண்டும். இம்மூன்றையும் சேர்த்துச் சொல்ல சென்னை டேவிட்சன் தெருவில் அனுமதியும் பெறவேண்டும். அன்று வேதம்; இன்று மார்க்ஸியம்; வேதக் கொடுமைகள் வேறு உருவத்தில் நடமாடுகின்றன. 1942 லிருந்து 1944வரை ஏகாதிபத்ய ஏஜெண்டுகள் என்று கம்யூனிஸ்டுகளைக் காங்கிரஸ் கருதியதென்பதை நாம் மறக்கவில்லை. தோழர்களும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. விருந்தோம்பும் பண்பாட்டை மாஸ்கோ நண்பர்கள் தமிழர்களுக்கு கற்றுத்தர வேண்டியதில்லை. தோழர்களே! வளர்த்துவிட்ட கட்சியின், வளரத் துணைசெய்த நண்பர்களின் மார்பில் பாயும் நன்றிகெட்டதனம் எனது வாழ்க்கையில் கிடையாது” இவைகள் சில குறிப்புகள்-வேறுபல உண்டு. எனினும்-கம்யூனிஸ்டுகளைப் பற்றி தமிழரசுக் கழகத்தின் கருத்து 1948 ல் இப்படித்தான் இருந்தது. இன்று 1958 ல் இவர்கள் தாசராகிவிட்டார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பழிவாங்க வேண்டுமென்று முடிவு செய்துவிட்ட எவருக்கும் வகையான அறிவாயுதங்கள்கிடைப்பதில்லை. அதனால்தான் தமிழரசுக் கழகத்தவர் - தங்களின் மதிப்பீட்டுக்கு எந்தவகையிலும் தகுதி பெறாத கம்யூனிஸ்டுகளுடன் தங்களை இணைத்துக்கொண்டுள்ளார்கள். இவர்களுடைய புதிய உறவு முன்னேற்றக் கழகத்தை முறியடிக்க எந்தக் ‘கால கட்டத்திலும்’ உதவ முடியாதென்பதை அவர்களும் உணர்வது நல்லது. ம. பொ. சிவஞானம் சொல்லிய கருத்துக்களை மறுத்து கம்யூனிஸ்ட் ஜீவானந்தம் பேசுகிறார்-கேளுங்கள்.

“ம. பொ. சி. கம்யூனிஸ்டுகளை கலப்பற்ற பொய்யர்கள் என்பது அறியாமை. இனச் சண்டைக்கு மக்கள் காரணமென்று கம்யூனிஸ்டுக் கட்சி மறந்தும் சொல்லாது. ம. பொ. சி. கம்யூனிஸ்டுகள் தமிழர்களல்ல என்ற கருத்தை விதைக்கப் பார்க்கிறார். குருட்டாவேசத்தில் தமிழர் தலைமைப் பீடத்தை நோக்கி அவாவிச் செல்லும் ம. பொ. சி.க்கு கம்யூனிஸ்ட் கட்சியின் போக்கு உரம் செய்யாது.”

15-1-48 ‘ஜனநாயகம்’ இதழில் ஜீவானந்தம் - ம. பொ. சிவஞானத்தை இப்படிப் படம் பிடித்துக் காட்டினார் - இன்று அவர் தூத்துக்குடிக்கு ஓடி வந்து அபாய அறிவிப்பு என்கிறார்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் விடுதலைக்குரல் முழக்கத்தினால் திகிலடைந்துள்ள கட்சியினர்- ஒருவருக்கொருவர் எந்த நிலையிலேயிருந்து - கழகத்தைத் தாக்குகிறார்கள் என்பதை அறிந்துள்ளீர்கள். பேரிகை - செங்கோல் - ஜனசக்தி- மூன்றும் ஒன்றாகி தூத்துக்குடிமீது படையெடுத்தன! “பேரிகை”-செங்கோல் சிவஞானம் பற்றிச் சொல்லியுள்ள சில வாசகங்களைத் தருகிறேன் - தலைப்புக்கள் மட்டுமே! **“கிராமணி ஏய்க்கிறார். ஒரு பக்கம் மேலிடம் - இன்னொரு பக்கம் கழகத்தோழர்கள் - இருவருக்கும் நாமமா? அரசியல் கட்சியல்லவென்றால் ஏன் விதிகளை மாற்றவேண்டும்? மிஸ்டர் மாநிலங்களின் மாய்மாலம்-மருங்காபுரி மண்டுகமணிகளையும் தோற்கடித்தார்கள்! மாநிலத்தின்முகமூடி கிழிகிறது! தமிழரசுக் கழகத் தொண்டர்களே உங்கள் தலைவனின் மாய்மாலத்தைப் பாருங்கள்-சித்தூர் கிளர்ச்சி உங்களுக்குச் சம்பந்தமில்லையாம். தண்டா முண்டா கழகத் தலைமைக்கு மறுக்கமுடியுமாவெனச் சவால் விடுகிறோம்! பிழைக்க ஒரு வழியுமின்றி கழகத்தைத் துவக்கினாராம்! நாடு மொழி என்பதெல்லாம் வெறும் ‘ஹம்பக்’. தமிழகத்து இளைஞர்களே ஏமாந்ததுபோதும்! திருச்சி மாஜி தண்டா முண்டா கழகத் தொண்டரின் கடிதம்!”** சிவஞானத்தைப்பற்றி மாரிசாமியின் மனப் போராட்டம் இது-இவர்கள் இருவரும் ஒன்றாகிவிட்டார்கள்- எப்படி மறந்தார்கள். நான்காண்டுகளுக்குள்-ஏன் இப்படி மாறிவிட்டார்கள்? இல்லையேல் கம்யூனிஸ்டுகளுக்குக் கரம் கொடுத்துவிட்டுக் கழகத்தாரைத் தீர்த்துக் கட்டமுடியுமா? **“திருச்சியில் நடந்த கருப்பையா பாரதி குடும்ப நிவாரண நிதி நாடகத்திற்குத் தலைமை தாங்கச் சென்ற பேரிகை ஆசிரியர் மாரிசாமி தனது பிரயாணச் செலவு என்ற பெயரில் ரூபாய் நூற்றியிருபத்திஐந்தை விழுங்கிவிட்டார் என்று சொல்லப்படுகிறதே இது நிஜமா! அந்த மேடையில் கருப்பையா பாரதியின் தாயாருக்கு தமிழரசுக் கழகத் தொண்டர் ஒருவர் ஒரு புடவை அன்புடன்கொடுத்ததை மாரீசக் கும்பல் தடுத்துவிட்டதாக வதந்தி உலவுகிறதே இது நிஜமா?”** தமிழரசுக் கழக முன்னாள் செயலாளர் கா. மு. ஷெரீப் என்பவர் தனது தலைவரின் சார்பில் இப்படி குற்றம் சாட்டினார் ‘பேரிகை’யின்மீது—“தமிழ் முழக்கம்” 1-5-54 இதழ் மூன்றாம் பக்கத்தில். இவையெல்லாம் மறைந்து விட்டனவா?

-கூடலரசன்

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 5 ‖ 30—8—58 ‖ இதழ் 11

# புதிய இந்திரன் புகுவான்!

திடீரென்று சாதி ஒழிப்பைப்பற்றி காங்கிரஸ் கட்சிக்கு அக்கரை ஏற்பட்டது. டில்லியிலிருந்து குமரி முனைவரையிலுள்ள எல்லாக் காங்கிரஸ் தலைவர்களும் சாதி ஒழிப்பைப்பற்றியே பேசினார்கள். சென்னையின் அமைச்சர்கள் சர்வகட்சித் தலைவர்களைக் கூட்டி யோசனை கேட்டார்கள். காங்கிரஸ் உண்மையாகவே சாதி ஒழிப்பில் இவ்வளவு அக்கரை செலுத்த ஆரம்பித்தது கண்டு பெரும்பாலோர் உவகையுற்றனர். போகுமிடங்களிலெல்லாம் அமைச்சர்கள் 'சாதிச் சனியனை ஒழித்தே ஆக வேண்டும்' என்று முழக்கமிட்டனர். வெங்கட்ராமன்கூட சாதி ஒழிய வேண்டுமென்று பேசினார். ஆனால் அந்தப் பிரச்சினை திடீரென்று அணைந்துவிட்டது. எதிர்க்கட்சித் தலைவர்களை யோசனைகள் கேட்டதெல்லாம் வெறும் வேடிக்கை நிகழ்ச்சியாகிவிட்டது. இதுபற்றி வி. வி. இராமசாமி எம். எல். சி. அவர்கள் சென்னை சர்க்காருக்கு ஒருகடிதம் எழுதியிருந்தார். "சாதி பேதங்களை ஒழிக்க ஏதாவது திட்டமுண்டா சர்க்காரிடம்? மாநாடு எப்போது கூட்டப் போகிறீர்கள்?" என்று வி. வி. ஆர். அந்தக் கடிதத்தில் கேட்டிருந்தார். சென்னை சர்க்கார் உடனடியாக அந்தக் கடிதத்திற்குப் பதில் எழுதியிருந்தார்கள். என்ன எழுதியிருந்தார்கள்?

"சாதி முறையை ஒழிப்பதற்கான வழி வகை குறித்து ஆராய மாநாடு ஏதும் கூட்டுகிற நோக்கம் சர்க்காரின் பரிசீலனையில் இப்போது இல்லை." இதுதான் சென்னை சர்க்காரின் பதில். ஏன் காமராசர் சர்க்கார் திடீரென்று குப்புறக் கவிழ்ந்தது? புரியவில்லை. மேலிடத்துத் தாக்குதலா? தனிப்பட்டவர்களின் மிரட்டலா?

சென்னை முதல்வர் காமராசர், தற்போது நடத்திக்கொண்டிருக்கும்திருச்சி மாவட்டச் சுற்றுப் பயணத்தில் பல இடங்களில் பேசி இருக்கிறார்—"ஜாதி பல நூறு ஆண்டுகளாக இருந்து வருகிறது, அதைப்பற்றி நாம் பொருட்படுத்தக்கூடாது. நமக்குச் சகிப்புத்தன்மை வேண்டும்" என்று பேசியிருக்கிறார். சாதி பல நூறு ஆண்டுகளாக இருந்து வருகிறதாம்—நமக்குச் சகிப்புத்தன்மை வேண்டுமாம்!

சர்க்கார், சாதியை ஒழிக்கமுடியாது என்ற தன்னம்பிக்கையற்றநிலைக்கு வந்துவிட்டது. சாதியின் பெயரால், யாரும், எது வேண்டுமானாலும் செய்யலாம், அதனால் கொடுமைக்குள்ளாவோர் சகித்துக்கொள்ளத்தான் வேண்டும்–என்று சொல்கிறார். திடீரென்று சர்க்காரின் கொள்கை மாறியதற்குக் காரணம் தெரிந்தாக வேண்டும். இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்தவரையில் எல்லாக்கட்சிகளும் ஒருமுகமாக ஒத்துக்கொள்ளும் திட்டம் சாதி ஒழிப்புத் திட்டம் ஒன்றுதான். அந்தத் திட்டத்தை—காங்கிரசின் ஜீவ இலட்சியத்தை—அந்தக் காங்கிரஸ் கட்சி நிறைவேற்ற அஞ்சுகிறது என்றால், உட்பொருள் ஏதோ இருக்கிறது. ஒரு வேளை, சாதிகள் ஒழிந்தால் காங்கிரஸ் ஒழிந்துவிடும் என்ற அச்சமாக இருக்குமா? சாதியின் பெயரால் வாக்குகள் பெற்று காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்டமன்றம் புகமுடியாது என்று காமராசர் பயப்படுகிறாரா? உண்மை இதுதான் என்றால், மற்ற கட்சிகள் தீவிரமாக முனைந்து சாதியை ஒழிக்க வேண்டும்! காங்கிரஸ் அதனால்ஒழிந்துவிடுமல்லவா! எது சாத்யம்? சாதி ஒழிப்பா? காங்கிரஸ் ஒழிப்பா! எப்படியும் இரண்டில் ஒன்று ஒழிந்தாக வேண்டும்! இல்லாவிட்டால் டில்லிச் சிங்காதனத்தில் புதிய இந்திரன்–அந்நிய இந்திரன் குடிபுக நேரிடும்!

★ ஊர் அகவல்! ★

தமிழரசுக் கட்சிக்காரர் ஒருவர், வழியிலே ஒரு பொதுவுடமைக் கட்சிக்காரரைச் சந்தித்தார்.

"தூத்துக்குடித் தேர்தல் தி. மு. கவுக்கு நல்ல பாடம் கற்பித்துவிட்டது. இல்லையா?" என்றார் காமரேடு.

"அடி அவர்களுக்கு மட்டுமல்ல; எங்களுக்கும் தான் என்றார்" தோழர் தமிழரசு.

காமரேடுக்கு இது புரியவில்லை. விழித்தார். தமிழரசு தொடர்ந்தார்:

"தூத்துக்குடியில் கம்யூனிஸ்ட் தி. மு. க.வை மிஞ்சிவிட்டது என்று பேசுகிறீர்களே, எந்த இடத்திலாவது உங்களுக்கு ஒத்துழைத்த கட்சிகளைப் பாராட்டிப் பேசியதுண்டா? உங்களுக்கு விழுந்த ஓட்டுகள் அனைத்தும் உங்களுக்காக விழுந்த ஓட்டுக்களா? நாங்கள் ஆதரித்தோம், தேவர் கட்சி ஆதரித்தது. எங்களுக்காகவும் தேவருக்காகவும் விழுந்த ஓட்டுக்கள் தி. மு. க.வுக்கு விழுந்திருந்தால் உங்கள் கதி என்ன ஆயிருக்கும் தெரியுமா? உங்கள் கதி என்ன, காங்கிரசின் கதியே அதோ கதிதான் தெரியுமா? தி. மு. க.வுக்கே போடாமல், நாங்களும், தேவர் கட்சியும் வாக்களிக்காமலே இருந்திருந்தால் தி. மு. க. உங்களைக் காட்டிலும் ஐயாயிரம் ஓட்டுக்கள் அதிகம் பெற்றிருக்கும். ஒரு ரகசியத்தைச் சொல்கிறேன், நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்; தி. மு. க.வுக்கு இன்றைக்கு விழுந்திருக்கும் ஓட்டுக்கள் என்றைக்கும் குறையாது. ஆனால் உங்களுக்கு அப்படியல்ல. நீங்கள் என்றைக்கும் கூட்டு வியாபாரம் தான்! சுயபலம் இல்லை! கோபப்பட்டுப் பயனில்லை. இனிமேலாவது நன்றியை மறக்காதீர்கள். இது சிறையிலிருக்கும் தேவருக்குத் தெரிந்தால் அவ்வளவுதான் 'அடியேனுக்குச் சதுரகிரி மலைவரை செல்வாக்கு இருக்கிறது என்பதை அறியாத அற்பர்கள்! தூத்துக்குடியில் கம்யூனிஸ்டுகளுக்கு விழுந்த ஓட்டுக்கள் எனக்காகவும், என்னுடைய குரு நேத்தாஜிக்காகவும் விழுந்த ஓட்டுக்கள்தான்" என்பார். அவரைப் பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே"

காம்ரேடுக்கு முகம் சிவந்தது. என்ன செய்வது! தமிழரசு சொன்னதிலே நியாயம் இருப்பதாக அவருக்குத் தெரிந்தது.

★

காமராசருக்கு சத்தியமூர்த்தி என்றால் போதும். அளவு கடந்த பக்தி. தன்னையுமறியாமல் கண்ணீர் வடித்துவிடுவார். ஆனால் சத்தியமூர்த்திக்கு கே. பி. சுந்தராம்பாளின்இசையென்றால்உயிர். அருகில் அமர்த்தி பாடச் சொல்லியே கேட்பாராம்! கொடுமுடிக் கோகிலத்தின் இனிய குரல், சத்தியமூர்த்தியின் தேசபற்றைக்கூட மாற்றிவிடுமாம்! என்ன ரசனை! என்ன ரசனை!!

அப்பேர்ப்பட்ட சத்தியமூர்த்தியை காமராசர் மறப்பதில்லை. அண்மையிலேதேனும் பேட்டையில் சத்தியமூர்த்தி அரங்கொன்று நிறுவினார். அதே அரங்கில் அதே தினத்தன்று கே. பி. சுந்தராம்பாளுக்கு ஒரு பாராட்டு நடத்தினார்—அம்மையார் எம். எல். சி. யாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதற்காக! குருவுக்கும் நன்றி செலுத்தினார், ஓய்வு நேரத்தில் தன் குருவுக்கு கானாமிர்தம் அளித்த சுந்தராம்பாளையும் கௌரவித்தார். நினைத்ததைச் செய்யக்கூடிய காமராசருக்கு டில்லியில் ஒரு அவமானம்! சத்தியமூர்த்தியின் படத்தைப் பாராளு மன்றத்தில் மாட்டுவதற்கு இடமில்லையென்று சொல்லிவிட்டார்களாம்!

"ஒரு காலத்தில் நேருஜியின் படத்தை பாராளுமன்றத்தில் மாட்டத்தான் போகிறார்கள்; அப்போது யாருடைய படத்தை எடுத்துவிட்டு அந்த இடத்தில் மாட்டப் போகிறார்கள்?" என்று காமராசர் மனம் கொதிக்கிறதாம்! பாவம்! சத்தியமூர்த்தியா, ஜவகர்லால் நேருவா என்று குழம்பித் தவிக்கிறார்!




3

சுப்பம்மா எழுந்துபோய் கதவைத் திறந்தாள். சிப்பாய்கள் 'தட தட'வென்று உள்ளே புகுந்தார்கள். சுப்பம்மா சிங்கத்தேவன் அருகில் உட்கார்ந்து 'ஓ' என்று அழ ஆரம்பித்தாள்.

'என்ன? என்ன?' என்ருன் ஒரு சிப்பாய்.

'எங்க அண்ணன் செத்துப் போனுரு' என்று கூறிய சுப்பம்மா, மீண்டும் அழ ஆரம்பித்தாள்.

'அண்ணே! மூக்கைத் தொட்டுப் பாரு'ண்ணே, மூச்சு வருதாண்ணு!' என்ருன் ஒரு சிப்பாய்.

ஒருவன் மூக்கைத் தொட்டுப் பார்த்தான். சிங்கத்தேவன் மூச்சை அடக்கிக்கொண்டு படுத்திருந்தான். சுப்பம்மா ஒப்பாரியை நிறுத்தவில்லை. அது சாவு விடு என்றே முடிவுகட்டிச் சிப்பாய்கள் திரும்பப் போனபோது, கூத்துப் பார்க்கப்போன சுப்பம்மாவின் அக்காளும், மாமனும் உள்ளே நுழைந்தார்கள். அங்கிருந்த சூழ்நிலையைக் கண்டு திடுக்கிட்ட அக்காள், சுப்பம்மாவைப் பார்த்து, 'என்னடி? என்ன நடந்தது? யார் இவன்?' என்ருள். புறப்பட்ட சிப்பாய்கள் நின்று கவனித்தனர். திடுக்கிட்ட சுப்பம்மா இன்னும் பலமாக அழ ஆரம்பித்தாள். சிப்பாய்கள் போய்விடமாட்டார்களா, அதன் பிறகு உண்மையைச் சொல்லிவிடலாம் என்று துடித்த சுப்பம்மாவின் உடம்பு, சிப்பாய்கள் அங்கேயே நிற்பதைப் பார்த்ததும் பதற ஆரம்பித்தது. அவள் மாமனுக்குக் கோபம் வந்தது. படுத்திருந்த சிங்கத்தேவனின் குடுமியைப் பிடித்துத் தூக்கி, 'டே! மரியாதையாகச் சொல்லு! யார் நீ?' என்ருன் அவன். சிங்கத்தேவன் அப்போதும் பிணம் மாதிரியே இருந்தான். ஆனல் அடக்கமுடியாத நிலையில் மூச்சு மட்டும் வெளிப்பட்டது. இதைக் கவனித்த சிப்பாய்கள், மீண்டும் உட்புறமாக வந்து நின்றுகொண்டார்கள். மாமன் 'பளிச்'சென்று அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். அப்போதே ஒரு உணர்ச்சியால் உந்தப்பட்ட சிங்கத்தேவன், கண்களைத் திறந்து அதே வேகத்தில் மாமனின் தாடையில் ஓங்கிக் குத்திக் கீழே தள்ளிவிட்டு, வெளியில் ஓடி கதவை இழுத்துச் சாத்திவிட்டுப் பறந்தான். சிப்பாய்கள் கதவை உடைக்க முயன்ருர்கள். அதற்குள் சிங்கத்தேவன் போயே போய்விட்டான். ஆத்திரம் கொண்ட சிப்பாய்கள், சுப்பம்மாவின் கைகளைக் கயிற்ருல் பிணைத்து, கதவை உடைத்து இழுத்துச் சென்றனர். அக்காள் அலறினுள். மாமன் அவள் வாயைப் பொத்தி, 'அவளுக்காக நீ ஏன் அலறுறே! என்னமோ அவள் தப்புப்பண்ணியிருக்கா; அவள் செத்துத் தொலையட்டும்!' என்ருன்.

சிங்கத்தேவன் 'படபட'ப்பாக ஓடி வந்து, தன் வீட்டுக் கதவைத் தட்டினுன். அவன் மனைவி வந்து கதவைத் திறந்தாள். உள்ளே புகுந்து தாழிட்டுக் கொண்ட சிங்கத்தேவன், 'அப்பாடா' என்ற பெருமூச்சோடு ஊஞ்சலில் சாய்ந்தான். அவன் அருகில் வந்து உட்கார்ந்தாள் அவன் மனைவி.

'என்ன படபடப்பு? ஏன் இந்தக் களைப்பு?'

'ஒரு வேடிக்கை!'

'என்ன அது?'

சிங்கத்தேவன் நடந்ததைச் சொன்னுன். அவள் சிரித்துவிட்டு, 'அந்தப் பெண்ணை இப்போது இழுத்துக் கொண்டு போயிருப்பார்களே!' என்ருள்.

'ஆமாம்!' என்ற சிங்கத்தேவன், 'காலையில்தான் போய், என்ன நடந்தது என்று கவனிக்க வேண்டும்' என்ருன்.

அவள் அவன் கால் அருகில் தள்ளி உட்கார்ந்து, கால்களைப் பிடிக்க ஆரம்பித்தாள். அந்த இன்பத்தை அனுபவித்தபடி, அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சிங்கத்தேவன் மெதுவாகச் சிரித்தான். அவள் தலைநிமிர்ந்தாள்.

'ஏன் சிரிக்கிறீர்கள்?'

'இல்லை! நடந்தவற்றையெல்லாம் நினைக்கும்போது, உலகம் நாடகமேடையாகத்தான் தோன்றுகிறது!'

'நாடகம் பார்ப்பதை நிறுத்திவிட்டு, சந்நியாசியாகப் போகிறீர்களா?'

'சந்நியாசி ஆவதற்கா இவ்வளவு தொல்லைப்பட்டு உன்னைக் கொண்டுவந்தேன்!'

'என்னிடம் அன்பிருந்து தானே கொண்டுவந்தீர்கள்!'

'இல்லை என்ருல் அதற்கென்று ஒரு போராட்டத்தில் இறங்கியிருப்பேனு? முன்பெல்லாம் நான் என்னவோ நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனல், நீ என் அருகில் வந்த பிறகு, என் மனநிலையே வேருகிவிட்டது. இரக்கமில்லாத ஒரு தந்தைக்கு இவ்வளவு எளிய மனம் படைத்த மகள் பிறந்தது அதிசயம்தான்!'

'என் தந்தை இரக்கமற்றவரா?'

'அவர் தியாகி! அதை நான் மறுக்கவில்லை. ஆனல், என்னை அவர் இகழ்ந்தார். சின்னஞ்சிறு வயதில் உன் குறும்புத்தனத்தையும், குறுகுறுத்த விழிகளையும் கண்டு உன்னையே மனைவியாக வரித்தேன். உன் தந்தையிடம் கேட்டேன். உனக்குத் தெரியாதா, 'கெட்டலைந்து வந்தவனே' என்ருர்; 'கீழ்க்குடியில் பிறந்தவனே' என்ருர். என் இரத்தம் கொதித்தது; சித்தம் துடித்தது. பழிவாங்கத்தான் உன்னைத் தூக்கி வந்தேன். என் ஆத்திரத்தை இன்னும் கிளறிக் கொண்டிருக்கிருன். உன் அண்ணன் ஊமைத்துரைக்கு அவன் ஒருவன்தான் உதவி செய்வது போலவும், மற்றவர்களெல்லாம் நடிப்பதாகவும் கருதிக்கொண்டிருக்கிருன். என்றைக்கு நீ இங்கே இருப்பது உன் அண்ணனுக்குத் தெரிகிறதோ, அன்றைக்கே இருவரில் ஒருவர் தலை உருளும்!'

அவள் 'பளிச்'சென்று அவன் கைகளைப்பிடித்துக்கொண்டாள்.

'ஐயோ! அண்ணுவிடம் நான் இங்கிருப்பதைச் சொல்லாதீர்கள். என்னைக் கடத்தி வந்ததும் நீங்கள்தான் என்பதை வெளியிடாதீர்கள். நான் யார் என்பதை ஊரார் அறியாமல் வீட்டுக்குள்ளேயே இருந்துவிடுகிறேன்.'

சிங்கத்தேவன் எழுந்து உட்கார்ந்தான்.

'விபரம் ஒருநாள் வெளியாகித்தான் தீரும். ஆனல், வெளியாகும் அன்று இருவரில் ஒருவர் தான் உயிரோடு இருப்போம்!'

'ஐயோ! இந்த எண்ணத்தை விட்டுவிடுங்கள்.'

'எண்ணத்தை விட்டுவிடுவதாலே கொதிக்கின்ற இரத்த குளிர்ந்துவிடாது அம்மா. இன்றைக்கு நான் கும்பினியாரிகூடச் சேர்ந்தால், கோடி கோடியாகக் கொட்டிக் கொடுக்கத் தயாரா

யிருக்கிருர்கள். என் கோபம் உங்கள் குடும்பத்தின் மீதே தவிர, நாட்டின்மீது அல்ல என்பதால்தான் ஊமைத்துரையின் பக்கத்திலேயே இருக்கிறேன். ஒவ்வொரு காரியத்தையும் நானே செய்கிறேன். பொம்முநாயக்கர் தூக்கிலிடப்பட்டபிறகு, பயந்து, தடுமாறி, பதறி, நிலைகெட்டு, ஓய்ந்து, வழிமாறி, உள்ளம் தளர்ந்துவிட்ட மக்களைத் தட்டி எழுப்பும்காரியத்தை, நான் ஒருவனேதான் துவக்கினேன். இந்த சிங்கத்தேவன் இல்லை என்ருல், ஆயுள் காலம் முழுவதும் ஊமைத்துரை சிறையில் கிடந்தே மடிய வேண்டியிருக்கும். விரைவில் ஏற்பட இருக்கும் விடுதலைக்கு வித்திட்டவன் இந்தச் சிங்கத்தேவன். ஆனுல், ஒட்டப்பிடாரத்திலிருக்கும் ஊமைத்துரையின் மனைவியும் சிறையிலிருக்கும் ஊமைத்துரையும் உன் அண்ணனையேதான் பெரிதாக மதிக்கிருர்கள். இதையும் பொறுத்துக்கொள்ள நான் ஏமாந்தவனல்ல. நாட்டு விடுதலைக்கு நான் வழியும் வகுப்பேன்; அது முடிந்ததும் உன் அண்ணனைத் தீர்த்துக்கட்டுவதிலும் குறியாக இருப்பேன்; என்ருன் சிங்கத்தேவன்.

'நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் என் கணவர். நீங்கள் பழிவாங்கக்கட்டியதாலியை பால் வார்த்துக் கட்டியதாகவே அணிந்துக் கொண்டிருக்கிறேன். மணம் எப்படி முடிந்தது என்பதை மறந்துவிட்டேன். மனம் உங்கள் மீதுதான். என் மஞ்சள் குங்குமம் நிலைக்கவும், என் மணக்கயிறு தழைக்கவும் நீங்கள் நன்ருக வாழவேண்டும். என் அண்ணனை நான் பார்ப்பது உங்களுக்கு ஆபத்து என்பதாலேதான், மணம் முடிந்த அன்றேமறந்துவிடச் சித்தமானேன். என்னைக் கொஞ்சம் பாருங்கள். எளிய மனம் என்றீர்களே, அதற்கு ஒரு வரம் மட்டும் கொடுங்கள்; என் அண்ணன் உயிரோடிருக்கிருர் என்ற எண்ணமே எனக்குப் போதும். நேரடியாகவோ, மறைமுகமாகவோ அவர் உயிருக்கு ஒரு ஆபத்தும் ஏற்படாது என்ற உறுதியை மட்டும் எனக்குக் கொடுங்கள். சொல்லுங்கள் அத்தான்; ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்? உங்கள் மௌனம் என் பயத்தை வளர்க்கிறது. கணவனைத் தவிர்த்து ஒரு உலகம் இருப்பதாகவே அறியாத உங்கள் மனைவி, தன் ஆயுளிலேயே முதல் முறையாகக் கேட்கும் ஒரே பிச்சை இது. சொல்லுங்கள் அத்தான், சொல்லுங்கள்!' – என்று கதறி அழுத அவள், அவன் கால்களைக் கட்டிப்பிடித்துக்கொண்டாள்.

'எழுந்திரு!' என்று அவளைக் கைகொடுத்துத் தூக்கிய சிங்கத்தேவன், 'இதோ பார்! உன் அண்ணன் உயிருக்கு என் கையால் ஆபத்து விளையாது. எந்த ஊமைத்துரை அவனை உயிராகக் கருதுகிருரோ, அதே ஊமைத்துரை அவனைத் துரோகி என்ற குற்றம் சாட்டி, துண்டு துண்டாக்கிப் போடும்படி செய்வேன்...' என்று இழுத்தான்.

அவள் துடித்து 'அத்தான்!' என்று அலறினுள்,

சிங்கத்தேவனுக்குக் கோபம் வந்தது.

'உனக்கு அண்ணன் வேண்டுமா, கணவன் வேண்டுமா?' என்று தானும் கத்தினுன்.

'இருவரும் வேண்டும்!'

'நடக்காது!'

'ஒரே ஒரு பிச்சைதானே?'

'இது என் மானநஷ்டத்தை ஈடுகட்டும் காரியம்!'

'அதற்குத்தான் என்னைத் தூக்கி வந்துவிட்டீர்களே!;

'அதன் விளைவு? தூக்கி வந்தது நான்தான் என்று தெரிந்தால் உன் அண்ணன் சும்மாயிருப்பானு? என்னைக் கொன்று போடத்தானே நினைப்பான்; அது உனக்குச் சம்மதமா?'

'இல்லை, என் அண்ணனை நான் பார்த்து, அமைதிப்படுத்திவிடுகிறேன்'

'சரிதான் உடனடியாக நான் சாவதற்கு நீ வழி தேடுகிருய். கேள். இருவரில் ஒருவர் இறப்பதுதான் முடிவாக இருக்க நேரும். அப்படி நேரும்போது, உனக்குத் தேவை அண்ணனு, கணவனு என்று முடிவு செய்துகொள்ள வேண்டியது உன் பொறுப்பு. அண்ணன்தான் தேவை என்ருல், என்னைக் காட்டிக்கொடு. கணவன் வேண்டுமென்ருல், அண்ணனின் எந்த முடிவைப்பற்றியும் கவலைப்படாதே!'

'வேறு வழியே இல்லையா?' என்று விம்மினுள் அவள்.

'இருப்பதாகஎனக்குத்தோன்றவில்லை' என்ருன் அவன்.

அவள் கல்லாய்ச் சமைந்தாள்.

சிங்கத்தேவன் மீண்டும் ஊஞ்சலில் படுத்து, அவளைப் பார்க்காதவனுய்த் திரும்பிக்கொண்டான். எல்லாவகையிலும்தானே வெற்றி பெறப் போவதாக அவனுக்கு ஒரு இறுமாப்பு. தன் மனைவி தன்னைக்காட்டிக்கொடுக்கமாட்டாள் என்றஒருநம்பிக்கை. இவ்வளவு வார்த்தைகளுக்குப் பின்னும் தனக்காக உருகும் மனைவியை எண்ணிப் பெருமிதம்!

சிங்கத்தேவன் நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தான்.

அவளுக்குத் தூக்கமா வரும்! மெதுவாக எழுந்தாள். பழைய ஓலைப்பெட்டிக்குள் வைத்திருந்த அண்ணனின் உருவப்படத்தை எடுத்தாள். ஓவியத்தைப் பார்த்தபடியே சிறிதுநேரம் அழுதாள். ஒரே கொள்கைக்காகப் போராடும் இருவருக்குள் பயங்கரமான பகை இருந்தால், அந்தக் கொள்கை எப்படி வெற்றி பெறும்! அதையும் எண்ணிப் பார்த்தாள். அலைக்கழிந்து கிடந்த திருநெல்வேலிச் சீமைக்கு ஒரே எதிரியாகக் கும்பினியார் இருந்திருந்தால், திருநெல்வேலிச்சீமை அடிமைப்பட்டிருக்க நியாயமில்லை. உட்பகையும், உள்ளக் குமுறலும், அண்ணனையே தம்பி காட்டிக்கொடுத்ததும் தான் நாட்டை அடிமையாக்கிற்று. இன்னும் வெள்ளையருக்கு ஆதரவாகப் பல பாளையக்காரர்கள் இருக்கிருர்கள். அவர்களையும் சாய்த்து, வெள்ளையரையும் தீர்க்க முடிவுகொண்டு இரண்டாம் போர்முனை துவங்கப் போகிறது. இந்த நேரத்திலுமா உட்பகை?

அவள் கலங்கினுள். இதைத் தீர்த்துரைக்க அவளால் முடியாது என்பதை உணர்ந்தாள். முடிவு காணமுடியாத சிக்கல் முடிவற்ற துயரத்தின் தாய். அவள் துயருக்கு இனி முடிவில்லை. அனபு செலுத்துகிருன் கணவன். ஆயினும் அண்ணனிடம் உள்ள வஞ்சம் அடங்கவில்லை. யாருக்காக அழுவாள்? போகுமிடம் தெரிந்து பயணம் புறப்பட்டால், பாதையில் தோன்றும் பயங்கரங்கள்போய்ச் சேர்ந்ததும் மறந்து போகும். இனி எங்கே போய் நிற்கும் இந்த வஞ்சம்? எந்த நிலையில் முடியும்? எப்படித் தீர்ப்பது இந்தச் சிக்கலை?—அவள் குழம்பினுள். ஒருவேளை சூழ்நிலை காரணமாக விடுதலைப் பட்டாளத்தையே வெள்ளைக்காரர்களுக்குக் காட்டிக் கொடுத்தால்தான், தன் அண்ணனைச்சாய்க்க முடியும் என்று தோன்றினுல் கணவன் அதையும் செய்துவிடுவானே? அதன் விளைவாக இரண்டாம் கட்டமும் தோல்வியில் முடியுமோ? அது என்ன ஆனுல்தான் என்ன! அதில் அண்ணன் மடிவானே, கணவன் மடிவானே?

— அவள் தொடர்பற்ற சிந்தனைகளில் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தாள்.

தான் இறந்துவிட்டால் இந்தத் தொல்லையே இருக்காதே! தன்னைத் தூக்கி வந்தவர் யார் என்பதும் தெரியாதே! குழப்பம் ஏற்படாதே! என்று ஒரு கணம் சிந்தித்தாள். சாவில்

## அறிவிப்பு

''ஊமையன்கோட்டை'' தொடர் கதை வெளியான முதல் இதழ் கேட்டு ஏராளமான கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அந்த இதழ் கைவசமில்லை என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிருேம். தொடர் கதை இதழ் வாங்க விட்டுப்போன வாசகர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கத்துடன், அந்த வாரத் தொடர் கதையைமட்டும் தனியாக வெளியிட்டிருக்கிருேம். அதன் விலை 10 புதிய காசுகள். தேவையானவர்கள் அருகில் உள்ள விற்பனையாளர்கள் மூலம் பெற்றுக்கொள்ளுங்கள்.

—நிர்வாகி.

அவளுக்கு பயம் இல்லை. ஆனுலும் ஒரு தடவையாவது அண்ணனைப் பார்க்கும் ஆசை மேலோங்கியது. மீண்டும் குழப்பம்! அவள் அண்ணனின் ஓவியத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, விரித்திருந்த பாயில் வந்து படுத்தாள். சிங்கத்தேவன் திரும்பிப் படுத்தான். 'ஐயோ! இவர் இப்பொழுதே அண்ணனிடம் அன்புள்ளம் கொண்டவராக மாறிவிடக்கூடாதா! அண்ணனையும் அமைதிப்படுத்தி, குடும்பத்தை ஆனந்த மாளிகையாக ஆக்கிவிடமாட்டோமா?'

— அவள் கற்பனையில் இறங்கினுள்.

துயரம் வரும் நேரத்தில் இன்பங்களைக் கற்பனை செய்வது தூக்கத்திற்கு நல்ல மருந்து.

அவள் அமைதியாகத் தூங்க ஆரம்பித்தாள். பொழுது புலர்ந்தது.

அவள் எழுந்தாள். சிங்கத்தேவன் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தான். வாசலில் இரண்டு குதிரைகள் வந்து நின்றன. அவள் இருந்த இடத்திலிருந்து குதிரைகளைப் பார்க்க முடியவில்லை. காலடி ஓசை மட்டும் கேட்டது. வாசலில் கோலமிட்டுக் கொண்டிருந்த வேலைக்காரி, வேகமாக உள்ளே வந்து 'ஐயா! ஐயா!' என்று சிங்கத்தேவனை எழுப்பினுள். சிங்கத்தேவன் எழுந்தான்.

'வீரத்தேவன் என்பவரும், பொம்மையா என்பவரும் வந்திருக்கிருர்கள்' என்ருள் வேலைக்காரி.

சிங்கத்தேவன் திடுக்கிட்டு, முதன் முதலில் தன் மனைவி எங்கே இருக்கிருள் என்பதை அறிய விரும்புபவன்போல் சுற்றுமுற்றும் பார்த்தான்.




## வெண்பாப் போட்டி-25.

ஈற்றடி :

சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

முடிவு தேதி 6-9-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

# மயிலாடும் பாறை

எஸ். எஸ். தென்னரசு

இது செங்கமலத்தின்காலம். செட்டிநாட்டின் வடபுலத்தில் அவள் குட்டிராஜ்யம் நடத்திக்கொண்டிருந்தாள். பேர்பெற்ற அழகி. ஊர் மயங்கும் நடையுடையாள். கார்கூந்தல் புரள, கமலமுகம் ஒளிபரப்ப கட்டிப் பொன் வார்த்தைகளை உருக்கி உதிர்க்கும் தங்கமகள். மஞ்சள்நிறம். வற்றுக்குளத்தின் பொற்றாமரையில் வண்டு இருப்பதுபோல் அவள் நெற்றியில் திலகம்—மன்மதருக்கு அது அங்குசம். நகை வியாபாரி தராசைத் துடைத்துத் துடைத்துப் பாதுகாப்பதைப்போல் செங்கமலம் உடலைப் பாதுகாத்தாள். திருமயத்தில் அவள் பேரரசியாய், பெண் வள்ளலாய், பொன் கொழிக்கும் சுக வாழ்வின் இணையற்ற தலைவியாய் புகழேணியின் உச்சிப்படியில் நின்று கொடிகட்டி ஆண்டாள். இத்தனைக்கும் அவள் தாசி.

அரண்மனை போன்ற மாளிகை. உழைத்துக் களைத்துச் சேர்க்காமல், உண்டியல் பணத்தைக் கொண்டு எழுப்பியதைப்போல் மிக எளிதில் அவள் அந்த மாளிகையை எழுப்பினாள். செல்வந்தர்களுக்கும் சீமையை ஆட்டிப்படைக்கும் அதிகார வெறியர்களுக்கும்தான் செங்கமலத்தின் பேட்டி கிடைக்கும். அவள் பேசினால் போதும் – என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு முகப்புத் திண்ணையில் காத்துக்கிடந்த லட்சாதிபதிகள்கூட அப்போது வாழ்ந்தார்கள். செட்டிநாட்டு மண்ணில் ஒரு சீமானின் அந்தஸ்துக்கு, செங்கமலத்தின் உறவு ஒரு எடைக்கல்லாக இருந்தது. பதினாறு வயதில் சம்பாதிக்கத் தொடங்கியவள் இருபது வயதுக்குள் ஜமீன்தாரிணியைப்போல் மாறிவிட்டாள். வெளியில் வருவதில்லை. உறவினரைப் பார்ப்பதில்லை. ஆலயத்திற்குச் செல்வதையும் நிறுத்திவிட்டாள். வாடிக்கையாக வந்துக்கொண்டிருந்த பிரபுக்களெல்லாம், மூடிய கதவு திறக்கப்படாத கண்டு விசனமுற்று வீடு திரும்பினார்கள். பவிசு வந்துவிட்டது—என்று பந்துக்கள் பொறுமினார்கள். எத்தனை நாளைக்கு இந்தப் பாராமுகம்—என்று வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டார்கள். சுகவாசிகளுக்குத் தொல்லை எதிரிகளிடமிருந்து வருவதில்லை. சுற்றத்தாரிடமிருந்துதான் தொடங்குகிறது.

செங்கமலத்தின் காலத்தில் சிவகங்கை ஜமீன் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது. ஜமீன்தார்கள் மகாராஜா பட்டம் பெற்றஇடங்களில் சிவகங்கையும் ஒன்று. அந்தக் காலத்தில் சிவகங்கை ஜமீன்தாருக்கு பிரதம ஆலோசகராகவும், அந்தரங்கக் காரியதரிசியாகவும் **சோமண்ணா** என்பவர் பணிபுரிந்து வந்தார். அவருக்கு ஜமீனில் நல்ல செல்வாக்கு இருந்தது. ஜமீன்தாரின் அனுமதியின்றி எதுவும் செய்ய அவர் அதிகாரம் பெற்றிருந்தார். குணசாலி, அறிவாளி. அதனால்தான் அதிகாரம் இருந்தும் யாரையும் அடக்கி ஆளாமல் அன்பினால் அணைத்து ஆண்டார்.

ஒருமுறை அவர் ஜமீன் காரியமாக புதுக்கோட்டை சென்றுவரும் போது அவரது கோச்சுவண்டி வில் ஒடிந்து திருமயத்திற்கு அருகே குப்புறக் கவிழ்ந்தது. மாலைநேரம். மாளிகையின் மேல்மாடத்தினின்று இதைக் கவனித்த செங்கமலம், வீட்டு வேலைக்காரர்களை அனுப்பிப் பார்த்துவரச்சொன்னாள். சோமண்ணா லேசான காயத்தோடு செங்கமலத்தின் மாளிகைக்கு அழைத்துவரப்பட்டார். சோமண்ணாவைத் தெரியாதவர்கள் செட்டிநாட்டில் இல்லை. **எசமான் சோமண்ணா** என்ற பட்டப்பெயரைப் பெற்ற சிவகங்கை ஜமீனின் செல்லப்பிள்ளையைப் பற்றி செங்கமலம் கேள்விப் படாதிருக்க நியாயமில்லை.

செங்கமலம் சோமண்ணாவை வரவேற்றாள். பணிவிடை புரிந்தாள். மருத்துவரை அழைத்துவரச்சொல்லி ஆள் அனுப்பினாள். மருத்துவருக்குப் பதிலாகக் கோபாலகிருஷ்ணம் பிள்ளை வந்தார். அவர் வீட்டு வைத்திய முறைகளைச் சொன்னார்.

## இது செங்கமலத்தின் வரலாறு

மறுநாட் காலை ஜமீனுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அன்று மாலையே ஒரு பெருங்கூட்டம் சிவகங்கையிலிருந்து திருமயம் வந்தது. செங்கமலத்தின் மாளிகை நிறைகொள்ளவில்லை. வந்தவர்களுக்கெல்லாம் வடித்துப் போட்டாள். தங்குமிடம் தந்தாள். திருமயத்து மக்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. கதவு திறக்கப்படாத செங்கமலத்தின் வீட்டில் கல்யாண அமளி!

சோமண்ணா செங்கமலத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார். பார்த்ததில்லை. அன்று அவருக்கு அந்த வாய்ப்பும் கிடைத்தது. பார்த்தார். பேசினார். அவள் கரத்தால் சுவைதரும் பால் அருந்தினார். பழச்சுளை சாப்பிட்டார். அவளோ விலைமாது. காசுக்கு கண் வீசிய காலம் போய், ஆசைக்கு ஒரு ராஜாவைத் தேடிக்கொள்ளும் கட்டத்தில் அவள் நின்றாள். அவரோ சிவகங்கை ஜமீனின் பேரதிகாரி. நடுத்தர வயது. அலெக்சாண்டரின் குதிரையைப் போல் எடுப்பான தோற்றம். செங்கமலத்தின் நடையும் இடையும் அவரது உடம்பெல்லாம் பாய்ந்து நரம்பெல்லாம் தாக்கியது. அவளுடைய கண்ணாடிக் கன்னத்தில் உமிழ்நீர் இரங்குவதைப் பார்த்தார். சிட்டுக் குருவி ரத்தத்தில் தொட்டு எடுத்த துண்டுகளைப்போலிருந்த அவளது உதடுகள் அவருக்கு சூடேட்டின. இரவெல்லாம் புரண்டு புரண்டு படுத்தார். அவருக்குப் பத்தடி தூரத்தில் அவள் படுத்திருந்தாள். சோமண்ணா தூக்கம் பிடிக்காமல் அலட்டிக்கொள்வதை அவள் கவனித்துக்கொண்டுதானிருந்தாள். எழுந்து வந்து விசிறக்கூட அவள் எண்ணினாள். கண்ணின் கருவிழியிலே அடங்கிக் கிடக்கும் அற்புதமான சக்தியைக் காட்டிலும், அதிஅற்புதமான சக்தி பெண்ணின் இருதயத்திலேதான் புதையுண்டு கிடக்கிறது. ஆடவர்கள் கடுகைப் பெரிதாக்கி காற்றிலே பரப்பிவிடுவார்கள். பெண்களால் உலகத்தைச் சுருட்டிக்கூட உள்ளத்தில் மறைத்துக்கொள்ள முடிகிறது. அகத்தின் அழகை முகத்தில் காட்டுவார்கள்; அன்பில் காட்டுவார்கள்; குழைவான பேச்சில் காட்டுவார்கள். ஆனால் அடக்கம் வழுவி அறியமாட்டார்கள். வலிய வந்து சுகம் தேடும் எளிய போக்கை வெறுப்பது பெண் குலத்திற்கேஅமைந்த வைரக் குணம்.

ஜன்னல் வழியே நிலா வெளிச்சம் வந்துகொண்டிருந்தது. நாய், பூனை, கிளி, எல்லாம்தூங்கின. ஆனால் செங்கமலம் தூங்கவில்லை. சோமண்ணா தூங்கவில்லை. கிளி, கூண்டுக் கதவு திறக்கக் காத்துக் கிடந்தது. பூனை, பால் பானை உடைய எதிர்பார்த்து நின்றது.

★

அடுத்த நாள் காலை சரி செய்யப்பட்ட கோச்சுவண்டியில் சோமண்ணா சிவகங்கை பயணமானார். வெளிக் கதவு திறந்து, புற்றரைவரை வந்து வழியனுப்பி வைத்தாள் செங்கமலம். அந்நியநாட்டு ராணியைப் பார்ப்பது போல் திருமயத்து மக்கள் வைத்த விழி வாங்காமல் அவளையே பார்த்தார்கள். குப்பைமேட்டில் கண்ட கரையான் புற்றை குறிவைத்து ஓடும் மயிலைப்போல் அவள் குடு குடு வென மாளிகைக்குள் ஓடிவிட்டாள்.

ஜமீன் சோமண்ணாவுக்கு அவள் செய்த உதவியை பெரிதெனக் கருதி பூரித்தாள். தலைமகனுக்குத் திருமணம் முடித்த அன்னையைப்போல் அவள் நிம்மதி பெற்றாள். தேடிய பொருளைக் காக்க, பெருமீன் வருமளவும் வாடிய கொக்கைப்போல் காத்திருந்த அவளுக்கு சோமண்ணா வருகை சொப்பனத்தில் ஆண்டவனே காட்சி தந்ததாகப் பட்டது. தனக்குள்ளே பேசிக்கொண்டாள்; சிரித்துக்கொண்டாள். வேலைக்காரர்களுக்கெல்லாம் காரணமில்லாமல் பணம் கொடுத்தாள். அன்பு காட்டினாள். நெடுநாட்களாகப் பூட்டிக் கிடந்த பள்ளியறையை கூட்டி முடித்தாள். பட்டுவிரித்த மெத்தையை உதறி விரித்தாள். மொட்டவிழா மலர்களை வாங்கித் தூவினாள். கொண்டாட்டம் தாங்கவில்லை. கிளிக்கு வைக்கவேண்டிய பிசைந்த பழத்தை நாய்க்கு வைத்தாள்; நாய்க்கு வாங்கிய பச்சை மாமிசத்தை கிளிக்குக் கொடுத்தாள். துன்பம் பெருகினால் இருதயம் துவளுகிறது. மனிதன் கஞ்சனாகிறான். உவகை மிஞ்சினால், பைத்திய நிலைபெற்று ஏழையும் வள்ளலாகிவிடுகிறான்.

செங்கமலம் மகிழ்ச்சிப் பெருக்கால் பேதலித்து அலைந்தாள். மனிதன் புதையல் கிடைத்தால் மகிழ்கிறான்; போரில் வென்றால் சிரிக்கிறான். ஆனால் பெண்கள், வாழ்வு கிடைத்தால், அதற்கு ஊன்றுகோல் கிடைத்தால், அவமானம் துடைக்கப்பட்டால் குதூகலமடைகிறார்கள்.

ஒரு வாரத்திற்குப் பிறகு ஜமீன் சோமண்ணாவிடமிருந்து அன்பளிப்பாக செங்கமலத்திற்கு ஒரு பண முடிப்பு வந்தது. அது ஜமீனின் அதிகாரப் பூர்வமான முத்திரை பெற்று வந்தது. செங்கமலம் அதை வாங்க மறுத்தாள். ஜமீன் குமாஸ்தாக்கள் அவளை விடவில்லை. 'இது ஜமீன் பரிசு! மறுத்தால் மகாராஜா கோபிப்பார்' என்று மிரட்டினார்கள். இருதயத்திற்குத் தொடர்பில்லாத சிரிப்பை முகத்திற்கு வரவழைத்துக்கொண்டு சம்பிரதாய முறைப்படி இரு கையேந்தி அதனைப் பெற்றுக் கொண்டு 'ஐயனை வரவேற்க அடியாள் காத்திருப்பதாக எசமானிடம் கூறுங்கள்' என்று தகவல் அனுப்பினாள்.

காலம் கனிந்தது. சோமண்ணா மாதம் ஒரு முறை திருமயம் வந்தார். தங்கினார். தாசி என்ற நிலை மாறி, செங்கமலம், சோமண்ணாவின் வைப்பாட்டி என்ற பட்டம் பெற்றாள். திருமயத்திலே அவளுக்கு மரியாதை வளர்ந்தது. அந்தஸ்து மேலும் உயர்ந்தது. கொலை வழக்கு, கொள்ளை வழக்குகளுக்குக் கூட பஞ்சாயத்தார்களில் ஒருத்தியாக அவள் அழைக்கப்பட்டாள்.

★

ஒரு நாள் இரவு–எதிர்பாராத விதமாக ஜமீன் கோச்வண்டி வாசலில் வந்து நின்றது. செங்கமலம் உள்ளிருந்து ஓடிவந்து கதவைத் திறந்தாள். மகாராஜா பாணியில் உடையணிந்த ஒருவர் கம்பீரமாக வண்டியிலிருந்து இறங்கினார். செங்கமலம் விழித்தாள். மகாராஜாவே வந்துவிட்டார் என்று எண்ணிக்கொண்டு மரியாதையோடு உள்ளே அழைத்துப் போனாள்.

"செங்கமலம் நீதானே!"– வந்தவர் கேட்டார்.

"ஆமாம் பிரபு! ஜமீன் பரிசுகூடப் பெற்றிருக்கிறேன்.

"என் மைத்துனர்தான் மகாராஜா. நான் சிவகங்கை திவான். **மேகவர்ணத்துரை** என் பெயர்" என்றார் அவர்.

செங்கமலம் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "எங்கே இவ்வளவு தூரம்! புதுக்கோட்டை பயணமா?" என்றாள்.

"இல்லை. உன்னைத் தேடித்தான் வந்தேன். நெடுநாள் விருப்பம். மகாராஜா ஊரில் இல்லாத நேரம் பார்த்து வந்தேன். உன்னைப்பற்றி சோமண்ணா நிறையச் சொல்லியிருக்கிறார்."

"சொல்லியிருப்பார். உங்களைப் பற்றியும் அவர் என்னிடம் சொல்லியிருக்கிறார்"

"அப்படியா? என்ன சொன்னார்?"

"நீங்கள் மிக நல்லவர்களாம்! பிரம்மச்சாரி என்றுகூடச் சொன்னார்!"

"செங்கமலம் நீ குறும்பாகப் பேசுகிறாய்! பெண்கள் இப்படித்தான் பேச வேண்டும்! என்னதான் அழகிருந்தாலும் நளினமில்லாத பெண்களை எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. வா...என் அருகில் உட்கார்!" தேனில் மூழ்கிய வண்டைப்போல் குழைந்து குழைந்து பேசினார்.

"மன்னிக்க வேண்டும். நான் இப்போது சம்பாதிப்பதில்லை. எசமான் சோமண்ணாவின் வைப்பாட்டி" என்றாள்.

திவானின் விழிகளில் படர்ந்திருந்த இன்பஒளி ஜுவாலையாக மாறியது.

— தொடரும் —

அடுத்த இதழ் வழக்கம்போல் பனிரெண்டு பக்கங்களோடு வெளி வரும்.



# அதுதான் தெரியவில்லை!

"மகனே, எல்லாம் என்னுள் அடக்கம். ஆனால் மனிதத் தன்மைமட்டும் உனக்குள் அடக்கம். அதை நீ உன்னிடம் இருந்துதான் பெற்றாக வேண்டும்!" என்று சொல்லிவிட்டு இயற்கை மறைந்தது.

மனிதன் தன் உள்ளே என்ன இருக்கிறது என்று ஆராயத் தொடங்கினான்.

சதை, எலும்பு, இரத்தம், நரம்பு, தோல் இவையும, இவை போன்றவையும்தான் அவன் அறிவுக்கு எட்டியது.

பின்னும் சிந்தித்தான்.

உடலின் உள் உறுப்புக்களைக் கண்டுபிடித்தான்.

இன்னும் கொஞ்ச காலம் கடந்தது. நோய் வந்தது.

வாடினான்; வருந்தினான்.

வலி போக்கிக்கொள்ள என்ன செய்வது என்று ஆராய்ந்தான்.

இயற்கையை அழைக்கலாம் என எண்ணினான்.

இவன் எண்ணம் உணர்ந்த இயற்கை 'என்ன மகனே வேண்டும்' என்று குரலில் குழைவு தோன்றக் கேட்டுக் கொண்டு முன் வந்து நின்றது.

'நோய் போக வேண்டும் தாயே' என்று மனிதன் தன் காதுகளுக்கே கேட்காத குரலில் கெஞ்சினான்.

இயற்கை கலகலவென நகைத்துவிட்டு 'நொந்து போகாதே, மகனே, இதோ இதைக் கொண்டு நோயைநீக்கிக் கொள்' என்று அன்பாகச் சொல்லி மனிதனின் கையில் கொத்துமூலிகைகளைக் கொடுத்துப் போனாள்.

அவள் போன பின்னர் மனிதன் அந்த மூலிகைகளைக்கசக்கிச் சாறு பிழிந்தான். அரைத்தான். எதையும் எதையுமோ கலந்தான். என்ன என்னவோ செய்தான்.

மருந்து என்று தின்றான்.

வலி மறைந்தது; வாட்டம் நீங்கியது.

உடல் மெருகு ஏறியது.

பின்னும் சில காலம் சென்றது. மனிதன் தன்னுள் என்னதான் இருக்கிறது என்று பார்க்க முயன்றான்.

முயற்சி செய்வதுகூட முடியாதபடி ஏதோ ஒன்று அவன் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தியது. துணுக்குற்ற நெஞ்சத்தோடு அது என்ன என்று ஆராய்ந்தான். முன்னே தடுத்ததைவிட மிகுந்த வலிவோடு அது அவனை இம்முறை தடுத்தது.

துணுக்கென்ற நெஞ்சத்தில் துயரம் குடி புகுந்தது.

புகுந்த துயரம் பெருகி வளர்ந்தது.

வளர்ந்த துயரம் வாட்டியது! உடல் மறுபடி தளரத் தொடங்கியது. நோயால் நொந்தபோது தளர்ந்ததைவிட இப்போது மிகுதியாகத் தளர்ந்தது.

மூலிகைகளின் சாற்றைப் பருகினான். அரைத்த மூலிகைகளைத் தட்வலாம் என்று எண்ணினான். எங்கே தடவுவது என்று அறியாமல் குழம்பினான்.

'குழந்தாய்' என்ற குரல்கேட்டு நிமிர்ந்தான்.

'அம்மா' என்று எதிரில் நின்ற இயற்கை யன்னையின் கால்களில் வீழ்ந்தான்.

அடியற்ற மரம்போல் அடி வீழ்ந்த மகனை இயற்கை வாரி எடுத்து 'மகனே' என்றது.

நிமிர்ந்து நோக்கினான்.

"இப்போது, உனக்கு வந்திருக்கும் நோய்க்கு இந்த மூலிகை பயன்படாது, மகனே இது **அச்சம்** என்ற விதையிலிருந்து கிளைத்த **துயரம்** என்ற முளை.

இது வளர்ந்து பூத்துக் காய்த்துக் கனிந்துவிட்டால் மனிதனை மென்று தின்றுவிடும்' என்றது.

'நான் என்ன தாயே செய்வேன்?' என்று மனிதன் அஞ்சி நடுங்கினான்.

'அஞ்சாதே மகனே, இதோ இதைப் பார்' என்று எதையோ காட்டியது.

மனிதன் நிமிர்ந்து நோக்கினான். மனதில் அச்சமும் துயரமும் குன்றுவதைக் கண்டான்.

'இது என்ன அம்மா!' என்று கேட்டான்.

'இதுதான் குழந்தாய், **துணிவு** என்ற மாமருந்து' என்றுசொல்லிவிட்டு இயற்கை எங்கோ சென்றது.

பகல் வந்தது, சென்றது; இரவு வந்தது; மறைந்தது.

இப்படி எத்தனை காலமோ... ஒருநாள் மனிதன் மறுபடியும் தன்னுள் என்னதான் இருக்கிறது என்று கண்டுபிடித்தது விடுவது என்று முனைந்தான். முனைந்தான்... முயன்றான். முயற்சிக்கு இடையில் மற்ற மனிதனைப் பற்றி எண்ணியபோது மனதில் எரிச்சல் ஏற்படுவதை உணர்ந்தான். அந்த எரிச்சல் கொஞ்சங் கொஞ்சமாக மிகுந்தது.

மனதைச் சுட்டது.

உடலைச் சுட்டது.

அதன் தகிப்பின் வேகத்தைத் தாங்க இயலாமல் மனிதன் திணறினான்.

திண்டாடினான்.

'என்ன எரிச்சல் என்ன எரிச்சல்' என்று சொல்லிச் சொல்லி வருந்தினான்.

உடல் தளர்ந்தது.

நோயால் தளர்ந்ததைவிட மிகுதியாகத் தளர்ந்தது. அச்சத்தால், துயரத்தால் தளர்ந்ததைவிட மிகுதியாகத் தளர்ந்தது.

உடல் மட்டும் தளராமல் உயிரும் தளர்ந்துவிடுமோ என்று கருதும அளவுக்கு வந்துவிட்டது.

இயற்கை வரும் வரும்-என்று மனிதன் எண்ணினான், எண்ணினான்.

வரவேண்டும் என்று விரும்பினான்.

வந்துவிடும் என நம்பினான்.

ஆனால் இயற்கை வரவில்லை.

இயேசு வந்தார், புத்தர் வந்தார், திருவள்ளுவர் வந்தார், பின்னுள்ள பெரியோர் அத்தனை பேரும் வந்தனர்.

இலக்கியம் படைத்தவர்கள் எல்லோரும் திரண்டு வந்தனர். வந்தவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரே குரலில், என்னவோ சொல்லிய வண்ணம் இருந்தனர்.

மனிதன் உற்றுக் கேட்டான் ஒன்றும் விளங்கவில்லை.

உலகம் கொஞ்சம் ஓய்ந்தபோது, உற்றுக் கேட்டான்.

கொஞ்சம் விளங்கியது. இப்படிப் பலமுறை முயன்ற பிறகு அவர்கள் சொன்னதை மனிதனால் விளங்கிக்கொள்ள முடிந்தது. அவர்கள் என்னதான் சொன்னார்கள்?

வேறு ஒன்றுமில்லை; இதுதான்; மனிதா-உன் மனதில்பொறாமை- விலங்கைப் பார்த்துப் பொறாமையல்ல; புள்ளைப் பார்த்துப் பொறாமையல்ல – **உன்னைப் போன்ற ஒரு மனிதனைப் பார்த்துப் பொறாமைப்படுகின்றாய்.** அதுதான் உனக்கு, நோயைவிட,

மா.கி. தசரதன் எம்.ஏ.

அச்சத்தைவிட அதிக வலிவோடு, வாட்டுகின்றது. வதைக்கிறது. "நான் என்ன செய்து மீளுவேன்?" என்று கேட்டான் மனிதன். அவர்கள் அனைவரும் சேர்ந்து ஒரே குரலில் **'அன்பு செய் அன்பு செய்'** என்று சொல்கிறார்கள்.

ஆமாம், இன்னும் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இனியும் சொல்வார்கள்.

ஆனால் மனிதன் காதுகளில் அந்த வேண்டுகோள் **இன்னும்** சரியாக விழவில்லை. உலகத்துப் பேரிரைச்சல் அவன் காதுகளைச் செவிடாக்கிக் கொண்டு வருகின்றது; கண்களைக் குருடாக்கிக்கொண்டு வருகின்றான் மனிதன் தானாக.

அவன் **மனம் மரத்துப் போவதற்கு முன்னால்** அவன் காதுகளில் 'அன்பு செய்- அன்பு செய்' என்ற மாமருந்து ஊற்றப்பட வேண்டும்.

யார் அந்தப் பணியைச் செய்வது?

அதுதானே தெரியவில்லை!

இவர் தான்

எம். ஜி. ஆர்.

அடுத்த இதழில்
ஆரம்பமாகிறது!

# வெண்பாப் போட்டி

## 24. கோவலர்வாய் வைத்த குழல்.

இன்பத் தமிழிருக்க என்னே அவர்கண்டார்
புன்மைநிலை இந்தியினைப் போற்றுதற்கு—பொன்னென்று
பாவாணர் ஏத்தும் பழந்தமிழ்ச் சொல்லன்றே
கோவலர்வாய் வைத்த குழல்.

—ந. மகிழ்ச்சித்தலைவன், மேலைச்சிவபுரி.

❁

'பா'வென்றும் 'ஊ'வென்றும் பாச்சுபூச் சென்றுபொருள்
ஏதொன்றும் இல்லா தியம்பிடினும்—பேரின்பம்
மேவும் மழலைக்கு மேலும் இனிக்குமோ
கோவலர்வாய் வைத்த குழல்.

—க. குணசேகரன், சென்னை-1.

❁

முல்லை மணம்வீச முத்துப்போல் மீனொளிர,
சில்லென்று தென்றல் சிலிர்த்துவர, - அல்லியெனும்
பூவலரும் பொன்மாலைப் போதில் இசைக்குதே
கோவலர்வாய் வைத்த குழல்.

—செந்தாமரை, ஆத்துப்பொள்ளாச்சி.

❁

முற்றும் துறந்தவரும் மூன்றும் வெறுத்தவரும்
சற்றும் விலகாமல் சார்ந்திருப்பர்; - பற்றுடனே
பாவலர்வாய் போற்றுமிளஞ் சேய்மழலைக் கொப்பாமோ
கோவலர்வாய் வைத்த குழல்.

—சாகுல் அமீது, சென்னை-21.

❁

கிள்ளப் பழுத்துவிடும் கன்னத்தில் முத்தமிட்டு
அள்ளி மடியிருத்தி ஆடிடுவேன்—பிள்ளையவன்
கேவலமோ? அன்னவனின் தேன்மொழிக் கிடாமோ
கோவலர்வாய் வைத்த குழல்.

—செ. கி. செயராமன், செம்மியமங்கலம்.

❁

வான்சுரந்த கொண்டல் மழைஊற்றும் முல்லைநற்
கான்சுரந்த காட்சியும் காட்சியிற்—தான்சுரந்த
பூவைத் தமிழ்அன்னை பூணிசை போக்கிடுமாம்
கோவலர்வாய் வைத்த குழல்.

—த. மருதமுத்து, பூமிஉடையான்பட்டி.

❁

இலக்கியத்தில் எண்சுவையை எந்தமிழ்த்தாய் ஈயத்
தூலக்கங்கொள் இன்பத்தைத் துய்ப்பேன்;—கலக்கமிலாப்
பாவலர்கள் பாட்டில்நானா பண்சுவைப்பேன்; பின்எனக்கேன்?
கோவலர்வாய் வைத்த குழல்.

—சா. கலாவதி, அகரப்பேட்டை.

❁

வாய்திறக்கப் பொன்கேட்கும் வண்ணமலர் என்மனைவி
தாய்ஆன பின்னவளின் தாலாட்டை,—சேய்கேட்க,
ஆவலுடன் நான்கேட்டேன்; அன்றே வெறுத்திட்டேன்
கோவலர்வாய் வைத்த குழல்.

—அ. லெ. சுப்பிரமணியன், புளியங்குளம்.

❁

ஆவின்தீம் பாலோ? அமிழ்தோ? அளப்பரிய
பாவின் சுவைதானோ? பாங்குடனே—தூவுகின்ற
நாவலர்வாய்ச் சொல்மலரோ? நங்கை குயில்மொழியோ?
கோவலர்வாய் வைத்த குழல்.

—மா. வழித்துணைவன், பெங்களூர்.

❁

சென்ற இடமெல்லாம் தேன்கலவை தான்பரப்பி
இன்ப இசைபெருக்கி இன்னுயிர்கள்—இன்பமுறப்
பூவையர்கள் காதலர்பால் போதையுறப் பண்ணிசைக்கும்
கோவலர்வாய் வைத்த குழல்.

—சோம. திருநாவுக்கரசு, மதுரை.

❁

கல்லைக் கரைத்திடுமோ? கண்ணேது மில்லாத
புல்லைக்கண் ணீர்மல்கச் செய்திடுமோ?-கொல்லைவாழ்
கோவினத்தைக் கூட்டி, குறும்பைகளைச் சேர்த்திடுமோ?
கோவலர்வாய் வைத்த குழல்.

—ச. ஜோசப், திருச்சி.

❁

கள்ளமிலா அன்பைக் கலந்தின்பம் ஊட்டிமிகத்
துள்ளுநடை போட்டேன் துயர்நீக்கும்—பிள்ளையதன்;
நாவெழுந்த சொல்லினும் நன்றாய் இனித்திடுமோ
கோவலர்வாய் வைத்த குழல்.

—கும்பகோணத்தான், வசந்தபுரம்.

❁

காதலித்தேன் அன்பாய்க் கலந்துநான் வாழ்வதற்கு
ஏதமுண்டோ? தூற்றுவதேன்? இவ்வூரார்-கோதையே!
மேவலரால் வாடுங்கால, மெல்லிசையால் இன்பூட்டா;
கோவலர்வாய் வைத்த குழல்.

—விரசை. அரும்பொன்.

❁

தென்றலிசை தோற்குதடி திங்கனியும் கைக்குதடி
அன்றலர்ந்த பூவில்வண் டார்த்திடும்-மென்னிசையில்
ஆவலிலை தோழி! அழைக்குதெனை ஆங்கொலிக்கும்
கோவலர்வாய் வைத்த குழல்.

—அரூர்செல்வன், அரூர்.

❁

வண்ணப்பொன் மேனியளே! வண்டுவிழிக் காரிகையே!
எண்ணத்தை ஈர்த்திட்ட ஏந்திழையே மண்ணிதனில்
மேவுந் தமிழிசையைத் தான் ஓங்கச் செய்திடுமே
கோவலர்வாய் வைத்த குழல்.

—வி. பாலசண்முகம், சென்னை-7.

❁

பாவலர்வாய் வந்ததொரு பாவொலியும் தித்திக்கும்
நாவலர்வாய் வந்ததோர் நாவொலியும்;—நீ, உணர்வாய்;
நாவலர்வாய்ச் சொல்லமுது; நல்லோர் செவிகளுக்குக்
கோவலர்வாய் வைத்த குழல்.

—மா. சுப்பையா, நாரைக்கிணறு.

❁

ஓவியர் கைத் தூரிகை, உன்னதமாம்; சான்றோரின்
ஆவியிலும் தீந்தமிழ் ஆர்ப்பரிக்கும்—சாவிலும்
காவலர்கைச் செங்கோல் கடனாற்றும்; பண்ணிசைக்கும்
கோவலர்வாய் வைத்த குழல்.

—வரதராசன், துறையூர்.

எங்கும் விற்பனையாகிறது!
முல்லை
(ஆகஸ்ட் இதழ்)
விலை அணா எட்டு.

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PRO: A. சாங்குபிள் கோ. 115, திண்டுக்கல் ரோடு, மதுரை.

ஜுபிடரின்
அன்னபத்தி
JUPITER PERFUMERS
CITY
M. S. T. V. NEETHI MOHAN, MADURAI.
எங்கும் கிடைக்கும்.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு